
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1227**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

**163**

**தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எஸ்.எஸ்.பி.லிங்கம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.**

# எஸ்.எஸ்.பி.லிங்கம்
# பேரறிஞர் அண்ணாவின் நிழல்!



1949-ஆம் ஆண்டு, கழகம் தொடங்கப்பட்ட நான்கே மாதங்களில், முதல் மாவட்ட மாநாடு திருச்சியில் 1950-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியில் நடைபெற்றது. அந்த மாநாடு நடந்து முடிந்த அடுத்த 20 நாட்களில், இரண்டாவது மாவட்ட மாநாடு தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் 1950-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதியும் 22-ஆம் தேதியும் நடைபெற்றது. மாநாட்டிற்கு 'சேலம் பெரியார்' என அழைக்கப்பட்ட கழக முன்னோடி சித்தையன் தலைமை தாங்கினார். பெரும் எழுச்சியுடனும் உற்சாகத்துடனும் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் எனப் பல ஆயிரம் பேர் குடும்பம் குடும்பமாக கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர். கருத்தரங்கம், நாடகம், கலைநிகழ்ச்சிகள் என இரண்டு நாட்களும் பெரும் ஆரவாரம். அந்த மாநாட்டில், ஓவியக் கண்காட்சியும் இடம்பெற்றது. அப்போது பிரபல ஓவியர்களாகத் திகழ்ந்த பாலு சகோதரர்கள் ஓவியக் கண்காட்சி அமைத்தார்கள்.

பேரறிஞர் அண்ணாவின் வழிகாட்டலில், தமிழ்நாட்டின் பெருமைகள் விதவிதமாக வரையப்பட்டிருந்தன. பெரும் பொருட்செலவு பிடித்த, அந்த ஓவியக் கண்காட்சிக்கான வண்ணங்களை எல்லாம் விலையில்லாமல் வழங்கியவர், எஸ்.எஸ்.பி.லிங்கம் என்று அழைக்கப்பட்ட சக்கரமல்லூர் சுந்தர பிரபுலிங்கம். பேரறிஞர் அண்ணாவின் நெருங்கிய நண்பர்.

கழகத்தின் முதல் தலைமையகமான 'அறிவகம்' பழைய கட்டடமாக வாங்கப்பட்ட போது, அதனைத் தமது சொந்த செலவில், தமது கடையிலிருந்து வண்ணங்களைக் கொண்டுவந்து அழகுபடுத்திய அன்பு உடன்பிறப்பு.

இன்றைய இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு அருகில் உள்ள சக்கரமல்லூர்தான் சொந்த ஊர். 1910-ஆம் ஆண்டுவாக்கில் பிறந்தவர். குடும்பத்தினர், சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் வசித்துவந்தனர். லிங்கத்தின் குடும்பம் கலை ஈடுபாடு கொண்டிருந்தவர்கள் என்பதுடன், திராவிடக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருந்தனர். குறிப்பாக, லிங்கம் அவர்கள் பேரறிஞர் அண்ணாவுடன் நாடகங்களில் நடிக்கத் தொடங்கி, அவரது நெருங்கிய நண்பராகவும் திராவிட இயக்கத்தின் தீவிர ஆதரவாளராகவும் உருவானார். பேரறிஞர் அண்ணா சென்னை வரும் போதெல்லாம், ராஜா அண்ணாமலைபுரத்தில் இருந்த லிங்கத்தின் இல்லத்தில்தான் தங்குவது வழக்கம். இவரது இல்லத்தில் தங்கியிருந்தபோது அண்ணா பல நாடகங்களையும் திரைப்படக் கதைகளையும் எழுதி இருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா மற்றும் கழக முன்னோடிகளும் பெரியாரிடமிருந்து விலகி, தனியாகக் கழகம் காண்பதற்கான தீவிர ஆலோசனைகளை நடத்துவதற்குத் தயக்கம் இல்லாமல் இடமளித்தவர், லிங்கம். இந்த சந்திப்புகளின்போது நாவலர், பேராசிரியர், கே.ஆர்.ராமசாமி எனப் பல தலைவர்களுக்கு லிங்கத்தின் வீட்டினரும் சிறப்பான விருந்தோம்பல் செய்து, அண்ணாவின் எதிர்காலத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

கழகத்தின் தொடக்க காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு சென்னையில் லிங்கம் அவர்களிடமிருந்த கார்தான் பயன்படுத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல் பல நேரங்களில் அந்த காருக்கு ஓட்டுநராகவும் இருந்த பெருந்தன்மையாளர் லிங்கம்.

கழகத்தின் ஏடாக முதன்முதலில் வெளிவந்த 'மாலை மணி'க்கு பொருளாதாரரீதியாக பக்கபலமாக இருந்தவர். பின்னர், அறிவகத்தில் இருந்து அதிகாரபூர்வமாக வெளிவந்த 'நம்நாடு' இதழுக்கும் பெரும் தூணாக இருந்தவர் லிங்கம்.

"ஏடு நல்ல முறையில் வெளிவரவும். அச்சகம் சீராகச் செயல்படவும் தோழர்கள் டி.எம்.பார்த்தசாரதி, இராமலிங்கம், சிவஞானம், எஸ்.எஸ்.பி.லிங்கம், கே.எம்.கண்ணபிரான், கே.ஆர்.பாலன், சுந்தா ஆகியோர் இரவு பகலாகப் பாடுபட்டனர்" என்று தி.மு.கழக வரலாறு நூலில் குறிப்பிடுகிறார், மறைந்த முன்னோடி சிட்டிபாபு.

அண்ணா பிரச்சாரப் பொதுக்கூட்டங்களுக்குச் செல்கிறார் என்றால், லிங்கம் தனது சொந்தச் செலவில் பெட்ரோலை நிரப்பி தயாராக வைத்திருப்பாராம்.

## அழகானது அறிவகம்!

சென்னையில் அப்போதே, 'எஸ்.வி. அம்பாள் அண்டு கம்பெனி' என்ற பெயின்ட் கடையை நடத்திவந்தவர் லிங்கம். கழகத்தின் தலைமையகமாக இயங்கிய, 'அறிவகம்' பழைய கட்டடமாக வாங்கப்பட்டபோது, அழகுபடுத்துவதில் முக்கியப் பங்காற்றியவர். அதை அழகுபடுத்துவதற்கும் புதுப்பிப்பதற்கும் தேவையான அனைத்து வண்ணங்களையும் தனது கடையிலிருந்தே விலையில்லாமல் வழங்கியவர்.

'எஸ்.எஸ்.பி.லிங்கம் போன்ற தன்னலமற்ற நண்பர்களின் நிழலில்தான் பேரறிஞர் அண்ணா போன்ற மாபெரும் தலைவர்கள், தங்களின் அரசியல் மற்றும் கலைப்பணிகளைத் தொய்வின்றி நடத்த முடிந்தது' எனக் குறிப்பிட்டுள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர்.

> **"எஸ்.எஸ்.பி.லிங்கம் போன்ற தன்னலமற்ற நண்பர்களின் நிழலில்தான் பேரறிஞர் அண்ணா போன்ற மாபெரும் தலைவர்கள், தங்களின் அரசியல் மற்றும் கலைப்பணிகளைத் தொய்வின்றி நடத்த முடிந்தது."**

கழகத்தின் தொடக்க காலத்தில் பொருளாதாரரீதியான உதவிகளோடு பக்கபலமாக இருந்தவர் மட்டுமல்ல; கழகத்தின் போராட்டக் களத்திலும் முன்னணியில் நின்றவர் லிங்கம்.

1953-ஆம் ஆண்டு மும்முனைப் போராட்டத் தின்போது, குலக்கல்வியை எதிர்த்து 'ராஜாஜி இல்லம்' முற்றுகைப் போராட்டத்தின் முதல் நாளில் கழக முன்னோடி சத்தியவாணி முத்து தலைமையிலான அணியில் முதன்மை யானவராக நின்றவர் லிங்கம். 'வர்ணாசிரமக் கல்வித் திட்டம் ஒழிக' என்று முழக்கமிட்ட வண்ணம், 'ஆச்சாரியார் இல்லம்' நோக்கி சென்றவர்களைத் துரத்தி அடித்து கைது செய்தது காவல் துறை. அதில் குறிவைத்து தாக்கப்பட்டவர் லிங்கம் அவர்கள். 1956-ஆம் ஆண்டு குன்றத்தூர் பொதுக்கூட்டப் போராட்டம், 1957-ஆம் ஆண்டு கருப்புக்கொடிப் போராட்டம் எனப் பல போராட்டங்களில் கலந்துகொண்டு கழகப் பணியிலும் நேரடியாகப் பங்குபெற்றுள்ளார்.

பேரறிஞர் அண்ணாவின் நண்பராக, கழகத்தின் தொண்டராக, கழகத்தின் ஆரம்பகால முன்னோடியாகத் திகழ்ந்த லிங்கம், நாடகத்துறைக்கும் திரைத்துறைக்கும் சில குறிப்பிட்ட பங்களிப்புகளையும் செய்துள்ளார். கழகத்தின் தொடக்க கால முன்னோடிகளைப் போல, எஸ்.எஸ்.பி.லிங்கம் அவர்களும் தன்னலம் கருதாமல் கொள்கை சுமந்தவர். அந்த அடையாளங்கள், இந்தத் தலைமுறைக்குத் தெரியாமல் இருந்தாலும், அவர்கள் தூக்கிச்சுமந்த கொள்கைநெறி என்றென்றும் கழகத்தின்வழி, தமிழ்நாட்டின் திசையைத் தீர்மானிக்கும்.

...துடிக்கும்

## 'விஜய் காங்கிரஸ்' தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி!

மத்தியப் பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவை இடத்திற்காகப் போட்டியிட்ட, காங்கிரஸ் மூத்த தலைவர் மீனாட்சி நடராஜனின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றத் தேர்தலுக்கு, தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸுக்கு ஒரு மாநிலங்களவை இடம் தந்தபோது, விண்ணப்பப் படிவம் நிரப்புவது முதல் வெற்றி வரை துணையாக இருந்தது கழகம். ஆனால், இன்றைக்கு காங்கிரஸ் வேட்பாளரின் மனு நிராகரிக்கப் பட்டது குறித்து, கண்டனம்கூட தெரிவிக்கவில்லை த.வெ.க. எனப் பலரும் விமர்சித்துவருகின்றனர்.

இது தொடர்பாகப் பதிவிட்டுள்ள பத்திரிகையாளர் பரக்கத் அலி, "மத்தியப் பிரதேசத்தில் மாநிலங்களவைத் தேர்தலுக்குப் போட்டியிட மனு செய்தார், காங்கிரஸ் வேட்பாளர் மீனாட்சி நடராஜன். வழக்கு விவரத்தைக் குறிப்பிடவில்லை எனச் சொல்லி அவருடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டி லிருந்து ராஜ்யசபாவிற்கு த.வெ.க. ஆதரவுடன் தேர்வு செய்யப்பட்டிருக்கும் பிரவீன் சக்கரவர்த்தியிடம் இருந்து எந்த எதிர்வினையும் வரவில்லை.

த.வெ.க.விற்குத் தேர்தல் ஆணையம் 'விசில் சின்னம்' ஒதுக்கப்பட்டபோது, தி.மு.க. கூட்டணியில் இருந்துகொண்டே த.வெ.க.விற்கு ஆதரவாகக் குரல்கொடுத்தார், பிரவீன் சக்கரவர்த்தி. "தேர்தலுக்கான விசில் ஊதப்பட்டுவிட்டது" என்று பதிவிட்டார். இன்னொரு கட்சிக்காக ஆனந்தப்பட்ட பிரவீன் சக்கரவர்த்தி, தன் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டபோது, ஏனோ குரல் எழுப்பவில்லை.

ஜெயலலிதா முதன்முறையாக ஆட்சிக்கு வந்தபோது, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே 'ஜெயா காங்கிரஸ்' என்ற ஒரு கோஷ்டி இருந்தது. ஜீனத் சர்புதீன், கோவை செல்வராஜ், சிங்காரம், அப்பு நடேசன், சின்னப்பன், சஞ்சய் ராமசாமி ஆகிய காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்தில் ஜெயா காங்கிரஸாகச் செயல்பட்டனர். அதே போல இப்போது, 'விஜய் காங்கிரஸ்' என ஒரு பிரிவு சத்தியமூர்த்தி பவனில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதற்குத் தலைவராக பிரவீன் சக்கரவர்த்தி இருக்கிறாரோ?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



மா.சின்னப்பா



### கழகமே குடும்பம், குடும்பமே கழகம்!

1998-ஆம் ஆண்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவரின் 45-வது பிறந்த நாள் விழாவின்போது, கழகத் தோழர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு வந்து, தலைவர் அவர்களைக் கண்டு வாழ்த்தினோம். அப்போது கிளைக் கழகத்தின் இளைஞர் அணியில் இருந்து வீச்சாகப் பணியாற்றிய நாட்களை நினைத்தால், இப்போதும் உற்சாகமாக இருக்கும். என் அப்பாவுக்குப் பின்னர் நானும், எனக்குப் பின்னர் என் மகனும் எனத் தலைமுறை தலைமுறையாகக் கழக உணர்வே எங்களை இயக்கிக்கொண்டிருக்கிறது.

**- மா.சின்னப்பா,**
**ஒன்றிய இலக்கிய அணித் துணை அமைப்பாளர்,**
**பைங்காநாடு, மன்னார்குடி மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## துரைத்தனத்துக்கு அளவில்லை!

1968-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், 'தமிழரசுக் கழகம்' நடத்திய 'மாநில சுயாட்சி மாநாட்டில்' உரையாற்றி னார் பேரறிஞர் அண்ணா. அப்போது, பலமான அரசு என்பது எப்படி இருக்க வேண்டும் என்று உரையாற்றினார். "பலம் என்பது தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம்; அமைப்புக்கு இருக்கலாம்; மாநில துரைத்தனத்துக்கு இருக்கலாம், மத்திய துரைத்தனத்துக்கு இருக்கலாம். ஆனால், அந்தப் பலம் யாருக்காக - எதற்காகப் பயன்படுத்துவது என்பது பற்றி விளங்கிக்கொள்ளாமலும் விளக்கிச்சொல்லாமலும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900